

# வைகையும் வால்காவும்

"தமிழ்ப் பாநிலவு"

## கி. சோவேந்தன்

நுங்கம்பாக்கம் :: சென்னை-34.

# வைகையும் - வால்காவும்

"தமிழ்ப்பா நிலவு"

த. கோவேந்தன்

பதிப்பகம்

14, ராம நாயக்கன் தெரு,
நுங்கம்பாக்கம் : சென்னை-34

முதல் பதிப்பு : ஜூன் '72.

விலை : ரூ 1-00

பதிப்புரிமை வாய்ந்தது

கண்மணி அச்சகம் — சென்னை-14.

# அறிமுகம்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று வள்ளுவரைப் போற்றிப் புகழ்கின்றான் புதுயுகத்து மாகவிஞன் பாரதி.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்து, தனது காலச் சமுதாயக் கோட்பாடுகளையும், வாழ்க்கை நெறிகளையும், என்றைக்கும் பொதுவான அறமுறைகளையும் வகுத்து அவர் அருளிய நூல் நிலைபேறுடையதாய், தமிழிலக்கியக் கருவூலத்தின் மாமணியாய்த் திகழ்கின்றது.

மனித சமுதாயத்தின் பன்னெடுங்காலமாக அறங்கள், சட்டங்கள், பண்பாடுகள் எனப் போற்றப்பட்ட பல நிதிகளை, கட்டுப்பாடுகளை, மிகப் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களைக் கால காலமாக வருத்தி, ஊமைகளாக்கி அவர்களது முதுகில் மிகச் சிலர் ஏறிச் சவாரி செய்வதற்குச் சாதகமாக இருந்த பல கோட்பாடுகளை, விதிகளை அக்டோபர் புரட்சியின் மூலம் 'சடசட'வென நொறுக்கி எறிந்துவிட்டு மனித குல வரலாற்றிலேயே முதன் முறையாகப் பாட்டாளி மக்களின் கையில் செங்கோலை ஈந்து புத்தறம் வகுத்தவர் லெனின். இவர் வள்ளுவர் காலத்துக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு பிற்பட்டவர்.

எனவே வள்ளுவரிலிருந்து புறப்பட்டு இலெனினுக்கு வந்து சேர சமுதாய வரலாற்றில் சுமார் இரண்டாயிரமாண்டுக் காலமாகிறது.

வள்ளுவர் அற நூல் வகுத்த ஆன்றோர். இலெனின் புதியதோர் உலகத்தையே போராடிப் படைத்த புரட்சித் தலைவன். சமுதாயப் புரட்சித் தத்துவத்தை விளக்கிப் பல நூல்களை இயற்றிய ஆசான்.

எனவே, இவ்விருவரையும் ஒப்புக் காண்பது எளிதான பணியன்று. இப்பணிக்கு இருவரது நூல்கள், கொள்கைகள் ஆகியவற்றில் தெளிவும், புலமையும் வரலாற்று ஞானமும் கட்டாயம் தேவை.

ஏனெனில் இது வள்ளுவர் சிறப்பைக் கூறப் புகுந்த நூல் அல்ல.அவர் நூலின் அடிப்படையாய் இலெனின் பெருமையை உணர்த்தும் நூலென்பதே பொருத்தம் என்பது என் கருத்து.

என் அருமை நண்பர் 'தமிழ்ப்பா நிலவு' கோவேந்தன் நூறு குறட்பாக்களைப் பெய்து, முதலிரண்டடியாக்கி, அவ்வடிகளின் பொருளினையபுக்கு ஏற்றவாறு இலெனினது சாதனைகள் கொள்கைகளைப் பின்னீரடிகளில் அடியில் எழுதி வெண்பா வடிவில் தந்துள்ளார்.

இவற்றில் வள்ளுவர் நூலிலும் இலெனினது வரலாற்றுச் சாதனைகளிலும் கோட்பாடுகளிலும் நூலாசிரியருக்குள்ள சிறந்த புலமை தெளிவாகப் புலனாகின்றது.

"பிறர்க்கின்னா" என்ற குறளடிகளுடன், "ஏழையர் இன்னலில் இன்புற்றார் வெங்கொடியர் பீழையுறப் பேர்த் தான் லெனின்" என்று லெனினைப்பற்றி இசைவுற எழுதிய குறளும், "எண்ணித் துணிக கருமம்" "காலம் கருதி இருப்பர்" "இவறலும் மாண்பிறந்த" "ஓர்ந்து கண்ணோடாது" "பெருமைக்கும் ஏனைச்" "ஊழையும் உட்பக்கம்" "இன்பம் விழையான்" "எண்ணிய எண்ணியாங்கு" "பிணிஇன்மை" முதலிய குறள்களைக் கொடுத்து பின்னிரு அடிகளில் இலெனினைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பவைகளும சமயமறிந்து பாராட்டத் தக்கவை.

சங்க நூல்கள் இலக்கணங்கள் முதலாக இன்றைய தமிழிலக்கியம் வரையில் ஆழ்ந்த புலமையும் உலகின் இன்றைய புரட்சிப் போக்குகளிலும் அவற்றைப் பிரதிபலிக்கும் நவீன இலக்கியங்களிலும் பெரும் ஈடுபாடும் தெளிவும் கொண்ட த. கோவேந்தன் இன்னும் பல புதிய பணிகளில் ஈடுபட்டுத் தமிழுக்கும், நாட்டு மககளுக்கும பெருந் தொண்டாற்றுவார் என்று உறுதியாக நான் நம்புகிறேன்.

அவர் முயற்சிகள் வெற்றி பெறுக என வாழ்த்துகிறேன்

சென்னை, **கே. சி. எஸ். அருணாசலம்**

*26-4-1972.*

# அணிந்துரை

சிவநெறிச் செல்வர், கல்வெட்டாராய்ச்சிப் புலவர், வித்துவான், பேராசிரியர் திரு.கா.ம. வேங்கடராமையா
எம். ஏ., பி. ஓ. எல்.
முதல்வர், செந்தமிழ்கல்லூரி, திருப்பனந்தாள், தஞ்சைமா.வ.

திருவள்ளுவர் முடியாட்சி நடந்த காலத்தில் வாழ்ந்தவர் அவர் அரசர் அமைச்சர் ஆகியோருடைய பண்புகள் பற்றிக் கூறியுள்ளமையை நாம் அறிவோம். எனினும் அவர் காலத்தை வென்றவர்; எந்நாட்டவர்க்கும் எக்காலத் தவர்க்கும் ஒப்பத்தன் நூலைப் படைத்திருக்கிறார். இலெனின் ஒரு புரட்சி வீரர்; முடியாட்சியிற் கண்ட குறைகளை எதிர்த்து, அவ்வாட்சியை ஒழித்துப் பொதுவுடைமையை நிலைநிறுத்தியவர். அத்தகைய இலெனின் வழியானது வள்ளுவர் வகுத்த வழியே என்றும், வள்ளுவர் கூறிய பண்புகள் இலெனின் மாட்டுண்டு என்றும், 100 திறக்குறள்களை முதற்கண் பெய்து, அக்குறட்பாக்கள் வழி இலெனினை, அறிமுகப் படுத்துகிறார், "வைகையும்–வால்காவும்" பெற்ற (வள்ளுவரும் லெனினும்) என்ற இந்த நூலாசிரியராகிய த. கோவேந்தன் அவர்கள்.

'தனக்குவமை இல்லாதான்' (1) என்பதற்கு மார்க்கையும், 'செயற்கரிய' (2) என்பதற்குக் கொடுங்கோன்மை போக்கிப் பொது உடைமை நாட்டுதல் என்றும் 'மறம்' (8) என்பதற்கு மறப்போா என்றும், 'அன்பிலது' (9) என்பதற்கு சாரையும் 'எச்சம்' (11) என்பதற்கு உண்மை, ஒழுக்கம், கல்வி என்றும், 'பிறன்மனை' (14) என்பதற்குப் பொய்க் கொள்கை என்றும், 'செய்தவம்' என்பதற்கு இலெனின் ஆற்றிய தொண்டு என்றும் 'வாய்மை' (28) என்பதற்கு

மார்க்கின் அறம் என்றும் 'உள்ளியது' (30) என்பதற்குக் கூட்டுடைமைக் கொள்கை என்றும் இவ்வாறாக இலெனின் கொள்கைகட்கேற்பத் திருக்குறளின் சொற்களுக்குப் பொருள் சொல்லப்பட்ட பான்மை போற்றற்குரியது. 22 ஆம் பாடலில் புரட்சித் தீ வருகைக்குக் காரணம் குறளை ஒட்டிக் கூறிய பாங்கும் பாராட்டுதற்குரியதாகும்.

மொத்தத்தில் இது கருத்துச் செறிவான புதுமை நூல்.

பாவேந்தராம் புகழ் பெறற் குரிய நம் அன்பர் த. கோவேந்தன் அவர்களுடைய பாப்புனையும் திறம் ஓங்கி வளர்க! அவர்தம் நூல்கள் மன்பதைகட்கு நல்லற உணர்ச்சி தருவன வாகுக!!

**கா ம வேங்கடராமையா**

திருப்பனத்தாள்,
10–5–1972.

# வாழ்வாங்கு வாழ்பவன்

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது ஆல்—தனக்கோர்
உவமையிலா மார்க்கின் உயர்கொள்கை போற்றிக்
கவலையற நின்றான் லெனின். 1

செயற்கரிய செய்வர் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்;ஆம்—பெயர்க்க
அரியகொடுங் கோல் அகற்றி ஆர்பொதுமை நாட்டிப்
பெரியனாய் நின்றான் லெனின். 2

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல் அன்றோ—சூழ்வார்தம்
குண்டுக்கு மாளாது, கொள்கை செயல்படுத்தி
எண்திக்கும் நின்றான் லெனின். 3

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்;உண்மை!—மெய்வாழ்வால்
எய்துசெல்வம் ஏழையர்க்கும், எல்லார்க்கும் ஈந்துலகில்
தெய்வமாய் நின்றான் லெனின். 4

# பொதுவுடைமை வையம்

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்,என்ற—சொற்குக்
குருப்சுகயா காட்டென்று கொள்ளவே அன்பின்
திருமணம் கொண்டான் லெனின். 5

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது அன்றோ—மன்பதையில்
தன்னினும் தன்நாட்டு மக்கள் தகவுயர்த்தப்
பொனநாட்டைச் செய்தான் லெனின். 6

அன்பிலார் எல்லாம்தமககுரியார், அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு எனும்—பொனமொழியால்
கோனாட்சி வீழ்த்தித்தான் கொண்டவளம் மக்கட்கே
தானாட்சி தந்தான் லெனின். 7

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்,
மறத்திற்கும் அஃதே துணை ஆம்—மறப்போர்
புரிந்தசெயல எல்லாம் பொதுவுடைமை வையம்
தெரிந்துய்யத் தேர்ந்தான் லெனின். 8

# புகழ் விரும்பான்

என்பில் அதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்;சான்று—வன்கொடிய
சாரும் அவனுள்ளம் சார்ந்தோரும் சாக்காட்டில்
சேர்ந்தெரியக் காய்ந்தான் லெனின். 9

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண
விழுமம் துடைத்தவர் நட்பு—முழுமைபெறு
நூருண்டின் மேலாய்ப் பொதுவுடமை நோற்ருன்பல்
நூருண்டும் வாழ்வான் லெனின். 10

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும், உலகில்—மிக்க
உருசியநா டுண்மை, ஒழுக்கம், நல் கல்வி
தரும்பரிசாய்த் தந்தான் லெனின். 11

நிலையில் திரியா(து) அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது—மலைபோல்
புகழ்மிகினும், தான்அப் புகழ்விரும்பான்; யார்க்கும்
இகல்அற் றமைந்தான் லெனின். 12

# படியரசு செய்தான்

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்; அதனால்—வன்தீய
புல்லரசை மண்புதைத்துப் பொற்பொழுகு சோவியத்தில்
நல்லரசை வைத்தான் லெனின். 13

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு— திறம்சார்
பொதுவுடைமை ஏற்றான்பின்; பொய்க்கொள்கை
வேண்டான்
புதுவுடைமை கண்டான் லெனின். 14

மிகுதியான் மிக்கவை செய்தாரைத்தாம்தம்
தகுதியான் வென்று விடல், ஆல்—மிகுபுகழ்
மார்க்கின் கனவுலகை மண்நிறுவித் தீங்குமுதல்
சேர்த்தாரை வென்றான் லெனின். 15

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்; சான்று—மண்ணில்
முடியரசின் வீழ்வாம்! முதல் அழிவாம்; இந்தப்
படியரசு செய்தான் லெனின். 16

# அடுங்கோலன்

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே,
மற்றின்பம் வேண்டு பவர், என்னும்—சொற்கின்பம்
காட்டப் பொது நலமே கண்ணானான்; மூச்சானான்
வேட்டிலன்வே றின்பம் லெனின். 17

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கின்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு என்றே—ஓதுமொழி
பாழ்முத லாளியும், செல்வக் குடியினரும்
வீழ்த்துணரச் செய்தான் லெனின். 18

சொல்லுக சொல்லில் பயனுடைய, சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்; என்ற—சொல்லாய்ப்
பொதுமக்கள் வாழ்வில் பொருளுடைமை எய்தப்
புதுக்கருத்தைச் சொன்னான் லெனின். 19

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்; எனவே—தீய
கொடுங்கோன்மை, சாதி, மதம் கோயிலிவை எல்லாம்
அடுங்கோலன் ஆனான் லெனின். 20

# பார்ப்ழ் மதத்தார்

~த்தது அறிவான் உயிர்வாழ்வான், மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்; அதனல்—இத்தரையில்
ஒப்புரவுக் கொள்கை உயர்வறிந்து, மன்பதைக்கே
புத்துயிராய்ப் போந்தான் லெனின். 21

அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி;இலையேல்—பற்றும்
புரட்சித்தீ! பொங்கும் பொதுவுடைமை என்று
வரலா றமைத்தான் லெனின். 22

ஒன்ரு உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்
பொன்ருது நிற்பது ஒன்று இலென்னும்—பொன்மொழி
மாநிலப் பாட்டாளி மக்களை ஒன்ருக்கி
ஒ மநிலைக்கு மீட்டான் லெனின். 23

அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை, வளிவழங்கும
மல்லல்மா ஞாலம் கரி, ஆமாம்—தொல்லைபுரி
சாரும், முதலாளிச் சார்பினரும், பாழ்மதத்தார்
வேரும்இலை என்ருன் லெனின். 24

# தாய்மை அறம்

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்; எனலால்—தாண்டுக
நாடென்ற போதும், சிறையில் நலிவுற்றும்
பீடன்றே பெற்றான் லெனின். 25

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்றால்—கொலைஞர்
முடியரசின் பாழும் முதலாளி மாரின்
வடிவுகண்டு மாய்த்தான் லெனின். 26

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்,
கள்ளத்தால் கள்வேம் எனல்; என்னும்—வள்ளுவன் சொல்
எண்ணாத நெஞ்சினர், ஏழையரை வஞ்சித்தோர்
மண்ணாகச் செய்தான் லெனின். 27

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற, என்னும்— தூய்மையால்
பேய்மையாம் கோனாட்சிப் பீடழித்து மெய்மாக்கின்
தாய்மையறம் தந்தான் லெனின். 28

# வடிவாக்கி வார்த்தான்

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க, காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம், என்னும்—நன்மொழிக்கே
பாட்டாளி மக்கள் பலரழியச் சீறியசார்
காட்டாக்க கண்டான் லெனின். 29

உள்ளிய தெல்லாம் உடன் எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின், என—உள்ளியே
கூட்டுடைமைக் கொள்கை, கைக்கொண்ட புரட்சிக்கண்
ணோட்டம் உவந்தான் லெனின். 30

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வருமால்—அறம்கொன்றார்
ஏழையர் இன்னலில் இன்புற்றார், வெங்கொடியார்
பீழையுறப் பேர்த்தான் லெனின். 31

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலையாம்—வகுத்த
குடியாட்சி எய்திப் பொதுவுடைமைக் கொள்கை
வடிவாக்கி வார்த்தான் லெனின். 32

# உழைப்பு நலன்

நாச்செற்று விக்குள்மேல வாராமுன் நலவினை
மேற்சென்று செய்யப் படும், என்னும்—பாச்சொற்கு
இலககியம்தான ஆனன் இமைசோரான இன்ப
இலக்கணம் ஈநதான லெனின. 33

வேணடின்உண் டாகத் துறக்க, துறநத்பின்
ஈண்டு இயற பால பல, எனும்—தூண்டலால
அல்லவோ, அல்லல்பட்டு ஆறறுதார்க காட்சியைச்
செல்வம்விட்டு ஏற்றூர் லெனின் 34

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு, எனத்
துய்ப்பறிவால்
வையம் பொதுவுடைமை வந்தால் துயர் அறுமென்று
எய்தினன் ஈடில லெனின். 35

இன்பம் இடையறுது ஈண்டும், அவா என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின், சான்று—தன்னலம்
தன்பொருள் இன்றி உழைப்பு நலன் தாமுழைப்பார்க்கு
என்றின்பம் ஈந்த லெனின். 36

# பொதுமை நலன்

இருவேறு உலகத்து இயற்கை, திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு;—மருளாம்
பொருளைப் பொதுமை செயின் வேறுபாடு உண்டோ?
கருதென்று வென்றான் லெனின். 37

தூங்காமை கல்வி துணிவுடைமை, இம்மூன்றும்
நீங்கா 'நிலன்' ஆள் பவர்க்கு, நல்—பாங்கென்று
தீங்கரசை நீக்கித் திகழ் பொதுமைக் கூட்டமைக்கத்
தூங்காது உழைத்தான் லெனின். 38

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக; எனும்—சொற்குறுதி
காட்டவே மார்க்கு; ஏங்கேல், கற்றுக் கனவுலகைக்
காட்டினான் நாட்டில் லெனின். 39

எவ்வது உறைவதுஉலகம், உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு; எனும்—செவ்வி
உலகே! உணர்க'என உண்மைப் பொதுமை
நலமே நயந்தார் லெனின். 40

# மக்கள் அரசு

இவறலும், மாண்பிறந்த மானமும், மாணு
உவகையும் ஏதம் இறைக்குச்—சுவடு
பிரஞ்சுப் புரட்சி, உருசியப் புரட்சி
இரண்டும்காண் என்றான் லெனின். 41

உற்றநோய் நீக்கி உறுஅமை முன்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல், ஆகும்—வெற்றிஎன
மார்க்கினைப் பேணி அன்பால் மக்கள்நோய் நீக்கியுயர்
சீர்பெற்றான் செம்மல் லெனின். 42

நல்லினத்தின் ஊங்குத் துணையில்லை, தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்; என்னும்—சொல்லார்ந்து
மக்களரசே துணையாய்-மாசகற்றிக் கூட்டுடைமை
தக்கரசு தந்தான் லெனின். 43

எண்ணித் துணிக கருமம், துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு. என்னும்—எண்ணம்
புரட்சியின் ஒவ்வோர நொடியும் போந்தன்றே மக்கள்
அரசமைப்பில் வென்றான் லெனின். 44

# கூட்டமைப்பு

வினைவலியும் தன்வலியும், மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல், பட்—டிணைந்தே
பொதுவுடைமைப் பூங்கா உருசிய மண்ணில்
புதுமையுறச் செய்தான் லெனின். 45

காலம் கருதி இருப்பர், கலங்காது
ஞாலம் கருது பவர்; அதனால்—சாலவே
நாடு கடத்திய நாளிலும் மார்க்கெண்ணப்
பீடு கொணர்ந்தான் லெனின். 46

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா, எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்; எனும்—செஞ்சொல்
அழியாமை வேண்டி அழித்தான் கொடுங்கோல்
தொழிலாளர்க்கு ஆவி லெனின். 47

பெருமைக்கும், ஏனைச் சிறுமைக்கும் தம்தம்
கருமமே கட்டளைக்கல்; என்று—ஒருபெரிய
மக்கள் அரசைப் பொதுவுடைமைக் கூட்டமைப்பைச்
சிக்கறத் தேர்ந்தான் லெனின். 48

# மாண்புடை மாந்தன்

அன்பு அறிவு தேற்றம் அவா இன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு; என்று—மன்மக்கள்
சோவியத்தைத் தூய குடியரசைத் தோள்தந்தார்
ஆவியெனக் காத்தான் லெனின். 49

உள்ளியது எய்தல் எளிதுமன், மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின், என்னும்—உள்ளத்தால்
ஆக்கப் பணியில் விழிப்போடு உணர்வோடும்
ஊக்கம் விளைத்தான் லெனின். 50

ஓர்ந்துகண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வதே முறை; எனத்—தேர்ந்ததால்
குற்றம் கடிந்து குடியாட்சிக் கோட்பாட்டில்
வெற்றி விதைத்தான் லெனின். 51

நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்; உலக—ஏடொறும்
காண்க எனக்காட்டி மக்களரசு ஏற்றமைத்தான்
மாண்புடை மாந்தன் லெனின். 52

# தெளிந்தான் தெளிந்தவன்

அல்லல்பட்டு ஆற்ருது அழுதகண் நீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை; என்று—நல்லோன்
இடித்திடித்துச் சொல்லிப் பொதுவுடைமை ஏற்ருன்
படித்தறிந்த மார்க்கின் லெனின். 53

வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவர்தம் ஒல்லைக் கெடும்;ஆம்—உருசிய
நாடொன்றே சான்று, நயமிலா நானிலத்தீர்
நீடொன்று பெற்ருன் லெனின். 54

கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை; அதனல்—கண்ணோட்டம்
கொண்டு நிலத்தின் சுமைகுறைத்தான் கொள்கையினை
எண்டிக்கும் ஏற்க லெனின். 55

ஒற்ருெற்றித் தந்த பொருளையும், மற்றும் ஓர்
ஒற்றினல் ஒற்றிக் கொளல் வேண்டி—வெற்றியுறத்
தோழமை, தன்னுறவு, யாவும் தொலைவிருந்து
சூழ்ந்தே தெளிந்தான் லெனின். 56

# யுகப்புரட்சி

ஆக்கம் அதர்விணுய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை; ஆமாம்—தீக்கண்
கொடுங்கோன்மை கொன்றுன் குளிர்சால் பொதுமைத்
தடங்காவைக் கண்டான் லெனின். 57

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்ஞர்க்கு
அடிமை புகுத்தி விடும்;என்று—இடித்தே தான்
ஒவ்வொருவர் தேவை திறமைக் குகந்தபடி
செய்தொழிலைச் சேர்த்தான் லெனின். 58

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்; எனத்—தோழமையால்
பாட்டாளி மக்களுடன் பாரில் பொதுயுறக்
கூட்டுடைமை கொண்டான் லெனின். 59

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்; எனத்—தன்பால்
அகப்பகையும் வந்த புறப்பகையும் எள்ளி
யுகப்புரட்சி ஊர்ந்தான் லெனின். 60

# பெரும் பெயர்

பிரித்தலும் பேணிக் கொளலும், பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல அமைச்சு—திராஃகியைத்
தள்ளித் திறமையரைச் சேர்த்துச் செருமனியை
உள்ளி உவந்தான் லெனின். 61

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மை அறிந்து எனும்—சொல்ஒப்ப
வெற்றிக்கு வித்தாகும் உண்மை மொழியன்றிக்
கற்பனைச்சொல் காட்டான் லெனின். 62

துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்ஆல்—மனநலஞ்சேர்
மக்கள் வறுமையை மாய்த்துப் பொதுவுடைமை
தக்கதெனச் சார்ந்தான் லெனின். 63

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின் என—எண்ணி
அருஞ்செயல் செய்தான்! அரசுமக்கட் காக்கிப்
பெரும்பெயர் பெற்றான் லெனின். 64

# குளிர்முகக் கோமான்

பொருள்கருவி, காலம், வினைஇடனோடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயற்கே—உருசியம்
புத்தெழுச்சி கொள்ளப் பொருள்கருவி காலம் எலாம்
ஒத்துவர நின்றான் லெனின். 65

தூய்மை துணைமை. துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பதனால்—செய்மைக்கண்
வெங்கொடுமைக் கோலாட்சி வீழ்த்திக் குடியரசே
எங்களரசு என்றான் லெனின். 66

போற்றல் அரியவை போற்றல், கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது எனும்—ஊற்றுக்கோல்
கொண்டு குடியரசுக் கோட்பாட்டை மக்களுறக்
கண்டறிந்து காத்தான் லெனின். 67

நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற; என்னும்—உண்மை
ஒளிரும் இருவிழிகள் ஒட்பம் தெறிக்கும்
குளிர்முகத்துக் கோமான் லெனின். 68

# நல்லரண்

உணர்வது உடையார்முன் சொல்லல், வளர்வதன்
பாத்தியுள் நீர் சொரிந் தற்று; என்—றுணர்ந்து
தொழிலாளர் தூய உழைப்பாளர் தம்பால்
மொழிந்தான் கருத்தை லெனின். 69

கற்றருள் கற்றர் எனப்படுவர் கற்றர்முன்
கற்ற செலச் சொல்லுவார் எனலால்—கற்றறிந்த
வேல்சு ஒருநாள், "மின்கமழ் நாடா? கனவென்றான்
கால்வாங்கச் செய்தான் லெனின். 70

பிணிஇன்மை, செல்வம், விளையின்பம், ஏமம்
அணிஎன்ப நாட்டிற்கு இவ்வைந்து—மணிநாடு
இதுவென்று சோவியத்து ஒன்றியம் சான்றாய்ப்
பொதுவுடைமை கண்டான் லெனின். 71

எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடையது அரண்; அஃதே—எல்லார்க்கும்
செல்வங்கள் எனனும் பொதுவுடைமை சேர்ந்துள
நல்லரண் என்றான் லெனின். 72

# உழைப்பு மழை

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனில் கூரியது இல்லெனச்—செய்தொழிகள்
எண்ணிறந்த ஆக்கியே எத்தர் செறுக்கறுத்தான்
மண்ணில் மதிஞன் லெனின். 73

என்னைமுன் நில்லன்மின் தெவ்விர், பலர் என்னை
முன்நின்று கல்நின் றவர்ஈதோ! இன்னும்
விழிமுன்நிற் பீரோ? பொதுமைப் பகைவீர்,
அழித்தானே 'சாரை' லெனின். 74

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்லை—தலைவன்
தொழிலாளர் தோழன், கொடுங்கோலின் காலன்,
வழிகாட்டி வென்றான் லெனின். 75

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு என்று—அடுத்த
உழைப்பாளர் மீள உடைமைபொது வாக்கி
மழையாய்ச் சுரந்தான் லெனின். 75

# பேதை முடியார்

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர் ஆம்—விழித்த
புரட்சியின்பின் பண்டை அலுவலரைப் போற்றிப்
புரட்சியரசு ஏற்ருன் லெனின். 77

கனவினும் இன்னது மன்னே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு என்று—உணர்ந்தே
இடையரசு ஆட்களைச் செல்வர்கை யாளைப்
புடைபெயரப் பேர்த்தான் லெனின். 78

சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு என—ஓர்ந்து
பொதுமை அறம்பேணுப் போலி இனத்தைக்
கதுமென்று ஒழித்தான் லெனின். 79

ஏவவும் செய்கலான் தான்தேரான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய் அதனுல்—தேவர்
அடியாரும் அன்புஇல் மதத்தினரும் பேதை
முடியாரும் சாய்த்தான் லெனின். 80

# ஆளாண்மை

காணுச் சினத்தான் கழிபெரும் காமத்தான்
பேணுமை பேணப் படும் எனவே—நாணுத
சாரின் பகைஉவந்தான்! சால்புமிக மக்களரசு
ஊரறியத் தந்தான் லெனின். 81

வில்லேர் உழவர் பகைகொளினும், கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை என்றே—நல்லறிஞர்
கார்க்கி, செகாவ்மாய கோவசுகி போன்ருேரின்
சீர்உணர்ந்து நட்டான் லெனின். 82

எள்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்
உள்பகை உள்ளதாம் கேடு எனலால்—மக்கட்கு
அழிவுசெயும் அன்பு இல் அலுவலரை ஐயன்
கழிவுசெய் திட்டான் லெனின். 83

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்என்—றுரிமையால்
வேளாளர் தம்மை வியந்தான்! தொழிலாளர்க்கு
ஆளாண்மை தந்தான் லெனின். 84

# சூது விளையாட்டு

நட்டார் குறைமுடியார், நன்றாற்றார், நன்னுதலார்
பெட்டாங்கு ஒழுகு பவர் என்றே-பட்டாங்கு
பெண்ணடிமை செய்தல் பிழைஎன்றான் மண்ணுய்தல்
பெண்ணுயர்வால் என்றான் லெனின். 85

நல்குரவு என்னும் இடும்பையுள், பல் குரைத்
துன்பங்கள் சென்று படும் எனலால்-வன்புசெயும்
நல்குரவை வென்றான் நலிவொழித்தான்; நாட்டுரிமை
எல்லார்க்கும் தந்தான் லெனின். 76

உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்என—உற்றுணர்ந்து
மக்கட்கா தல்கொண்டான் மற்றைக்'கள்' தீதொழித்து
திக்கெட்டும் வாழ்ந்தான் லெனின். 87

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல்; என்று—உறுதி
உளங்கொண்டு கூட்டுரிமை நாட்டிலே சூது
விளையாட் டொழித்தான் லெனின். 88

# பீடரிது பெற்றுன்

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் நாடித்—தாய்மகவு
இல்லம், உழைப்பாளர்க்குஓய்வுநலன், இன்பமனை
எல்லாம் வகுத்தான் லெனின். 89

நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல் இன்(று—உலகில்
குடியரசும் கூட்டுடைமைக் கொள்கையும் காட்டும்
படிமை படைத்தான் லெனின். 90

இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல் என்ற-பொன்மொழிக்
கொப்பவே கோதிலறக் கோட்பாட்டை மானம்காத்து
ஒப்பவே காத்தான் லெனின். 91

பெருமை உடையவர் ஆற்றுவர், ஆற்றின்
அருமை உடைய செயல்;காண்!—உருசிய
நாடரிதாக் கொள்பொதுமை நானிலம் பின்நடக்கப்
பீடரிது பெற்றுன் லெனின். 92

# வெற்றியுலகு ஆள்வோன்

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண் என்று—நன்குணர்ந்து
போராடிப் பெற்ற புரட்சி உழைப்பாளர்
சீராரச் செய்தான் லெனின். 93

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன் என்று-பண்புடைமை
சேர்க்கும் பொதுவுடைமைச் செய்தொழில் யார்க்கும்என
ஆர்க்கும் அறிஞன் லெனின். 94

அன்பொரீஇத் தற்செற்று அறநோக்காது ஈட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர் என மன்பதை
காணவே சார்பொருள் கைக்கொண்டான்
கார்ல்மார்க்கின்
மாணறம் காத்தான் லெனின். 95

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி எனவே—மாள்வின்றிக்
குற்றம் இலனுகிக் கொள்கை அறம்காத்து
வெற்றியுல காள்வோன் லெனின். 96

# உலகின் உழவன் லெனின்

உழுவார் உலகத்தார்க்கு ஆணி, அஃது ஆற்ருது
எழுவாரை எல்லாம் பொறுத்து என்று—உழுவார்
நலனே உழைப்பின் தலைஎன்று காத்தான்
உலகின் உழவன் லெனின். 97

தொல்வரவும் தோலும் கெடுக்கும், தொகையாக
நல்குரவு என்னும் நசைஅதனல்—இல்லாமை
இல்லாமல் செய்தான் பொதுமை வளம்பகுத்தான்
எல்லார்க்கும் தோழன் லெனின். 98

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் ஏன்?-முரண்கொள்
இனப்போர்க்கு அரணும், கொடுமைக்கு இடமாம்
கடவுளைக் காய்ந்தான் லெனின். 99

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு எனல் சான்ருகக்
கோவரசு சாரின் கொடிறுடைத்தான் மக்கட்கோர்
காவரசு கண்டான் லெனின். 100

# தோழனைப் பாடுவேன்

உலகின் தோழனைப் பாடுவேன் பொது
வுடைமைத் தந்தையைப் பாடுவேன்!
நிலமெலாம் அதன் விளைவெலாம் சரி
நிகர தாக்கி உழைப்பவர்
நலமெலாம் பெற நானிலத்தில் நாடு
அமைத்த நண்பனைப் பாடுவேன்!
இலெனின் ஆம் பெயர் கொண்ட ஏந்தலின்
இயல்பெலாம் நனிபாடுவேன்!

உலகெலாம் ஒரு குடும்பமாக்கிட
உறுதி தந்தனன் பாடுவேன்!
உலகெலாம் பொதுவுடைமையால் அமைவு
ஊட்ட வந்தனன் பாடுவேன்!
உலகெலாம் மக்கட்குரிமை யாக்குவேன்
உணர்க என்றனன்—பாடுவேன்!
உலகெலாம் உய்ய உலக மக்களின்
உள்ளம் வாழ் இலெனினைப் பாடுவேன்.